PSC/DIS/01/02/2022-02

2022.04.25

அனைத்து அமைச்சு செயலாளர்கள்
அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்
அனைத்து இராஜாங்க அமைச்சு செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் ஆரம்ப புலனாய்வு அறிக்கைகள் மற்றும் குற்றப்பத்திர வரைவுகளை சமர்ப்பித்தல்**

குறித்த ஒரு நிகழ்வு தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப புலனாய்வொன்றின் அறிக்கை மற்றும் அதற்குரிய குற்றப்பத்திர வரைவுகளை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கையில் சில குறைபாடுகளுடன் சமர்ப்பித்தல் மற்றும் மீளவும் அக்குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக எடுக்கும் காலம் தொடர்பில் கவனம் செலுத்தி ஆரம்ப புலனாய்வொன்றின் அறிக்கைகள் மற்றும் குற்றப்பத்திர வரைவுகளை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கையில் கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் உள்ளடங்கிய சரிபார்ப்பு பட்டியலொன்று (Check list) தயாரிக்கப்பட்டுள்ளது.

02. குறித்த சரிபார்ப்பு பட்டியலை இத்துடன் தங்களுக்கு அனுப்பி வைப்பதோடு, எதிர்வரும் காலங்களில் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் ஆரம்ப புலனாய்வு அறிக்கைகள் மற்றும் குற்றப்பத்திர வரைவுகளை சமர்ப்பிக்கையில் குறித்த சரிபார்ப்பு பட்டியலுக்கு அமைவாகப் பரிசீலித்து, அடையாளமிடப்பட்ட சரிபார்ப்பு பட்டியலின் பிரதியொன்றுடன் ஏற்புடைய ஆவணங்களை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

எம்.ஏ.பீ. தயா செனரத்
செயலாளர்
அரசாங்க சேவை ஆணைக்குழு

**அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் ஆரம்ப புலனாய்வு அறிக்கைகளை சமர்ப்பிக்கையில் கவனத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் குறித்த சரிபார்ப்பு பட்டியல்**

| தொடரிலக்கம் | விபரம் | ஆம்/இல்லை | ஏற்புடையதன்று |
|---|---|---|---|
| 01 | ஆரம்ப புலனாய்வுக்காக அலுவலரொருவர் /அலுவலர்களைக் கொண்ட குழுவொன்று முறைப்படி நியமிக்கப்பட்டுள்ளது. (தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13:1 ஆம் பிரிவிற்கமைவாக) | | |
| 02 | ஆரம்ப புலனாய்வு அலுவலர் /ஆரம்ப புலனாய்வு குழுவை முறைப்படி நியமிப்பது குறித்த கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று ஆரம்ப புலனாய்வு அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | | |
| 03 | ஆரம்ப புலனாய்வு அறிக்கை தாமதமடைந்திருப்பின் அதற்கான காரணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. (பொ.நி.சு. 30/2019 மூலம் திருத்தியமைக்கப்பட்ட தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13:2 ஆம் பிரிவு குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளமை) | | |
| 04 | ஆரம்ப புலனாய்வு அறிக்கையின் தொடர்பிலக்கம் மற்றும் திகதி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | | |
| 05 | ஆரம்ப புலனாய்வின் போது நிகழ்விற்கு/நிகழ்வுகளுக்கு ஏற்புடைய அலுவலர்களிடமிருந்து/நபர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | | |
| 06 | ஆரம்ப புலனாய்வின் போது சந்தேகத்துக்கு ஆளான அலுவலர் அல்லது அலுவலர்களிடமிருந்து வாக்குமூலங்கள் பெறப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | | |
| 07 | பொருட்பற்றாக்குறை அல்லது பொருட்களின் பயன்பாடு தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட அலுவலர்/அலுவலர்களின் பொறுப்பிலுள்ள ஏற்புடைய அனைத்துப் பொருட்களும் இருப்பெடுக்கப்பட்டுள்ளன. (தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13:6 ஆம் பிரிவிற்கமைவாக) | | |
| 08 | ஏதேனுமொரு கணக்கெடுப்பு மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தொகையை அல்லது பொருட்களின் அளவுகளை குற்றச்சாட்டுக்களில் உள்ளடக்குவதாயின் அக்கணக்கெடுப்பானது தெளிவாக ஆரம்ப புலனாய்வு அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | | |
| 09 | ஆரம்ப புலனாய்வொன்றின் போது எவரேனுமொரு அலுவலர் சாட்சியமளிக்க மறுத்தமையானது தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13:10 ஆம் பிரிவிற்கமைவாக அறிக்கையிடப்பட்டுள்ளது. | | |
| 10 | ஆரம்ப புலனாய்வுடன் தொடர்புடைய நிகழ்வு குறித்த சாராம்சம் ஆரம்ப புலனாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | | |
| 11 | ஆரம்ப புலனாய்வு அலுவலர்/ குழுவினால் சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் அவர் பொறுப்பேற்றுக்கொண்ட ஆவணங்கள் ஆகியன புலனாய்வு அறிக்கையுடன் உரியவாறு | | |

| | | | |
|---|---|---|---|
| | இணைக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. (தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 13:12 ஆம் பிரிவிற்கமைவாக) | | |
| 12 | அவ் ஆவணங்கள் ஒழுங்குவரிசைப்படி இலக்கமிடப்பட்டு, கொடியிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | | |
| 13 | ஆவணங்களை சமர்ப்பிக்கையில் அவ் ஆவணங்களின் மூலப்பிரதிகள் அல்லது மூலப்பிரதிகளிலிருந்து எடுக்கப்பட்டு பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்ட நிழற்படப்பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | | |
| 14 | அரசாங்க காணிகள் தொடர்பான சிக்கல்களுக்கு ஏற்புடைய ஆரம்ப புலனாய்வுகளை நடாத்துகையில் குறித்த சிக்கலுடன் சம்பந்தப்பட்ட அளிப்புப்பத்திரங்கள், அனுமதிப்பத்திரங்கள், இருமடித்தாள், திணைக்கள சுற்றறிக்கைகள், சட்டங்கள் மற்றும் ஏனைய ஏற்புடைய ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் ஆரம்ப புலனாய்வு அறிக்கையுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | | |
| 15 | குற்றப்பத்திர வரைவானது ஏற்புடையவாறு தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் பின்னிணைப்பு 5 அல்லது பின்னிணைப்பு 6 இற்கமைய தயாரிக்கப்பட்டுள்ளன. | | |
| 16 | குற்றஞ்சாட்டப்பட்டவரால் புரியப்பட்ட குற்றம் மற்றும் குற்றம் புரியப்பட்ட திகதி/காலப்பகுதி வரைவு செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. | | |
| 17 | தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் முதலாவது அட்டவணையின் 15 ஆம் பிரிவின் கீழ் வருகின்ற குற்றமொன்று தொடர்பில் குற்றச்சாட்டுக்களை வரைவு செய்கையில் மீறப்பட்ட தாபன விதிக் கோவையின் ஏற்பாடு, நிதி ஒழுங்குவிதி, சுற்றறிக்கைகளின் பிரிவு, திணைக்கள கையேடுகளின், எழுத்துமூல அறிவுறுத்துரைகளின் மற்றும் அறிவுறுத்தற் கோவைகளின் ஏற்பாடுகள் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன. | | |
| 18 | குற்றப்பத்திர வரைவில் சாட்சியாளர்கள் மற்றும் எழுத்தாவணங்களை உள்ளடக்குகையில் வரைவு செய்யப்பட்ட குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்குத் தேவையான சாட்சியாளர்கள் மற்றும் சாட்சிகள் உள்ளடங்கிய குறிப்பிட்ட ஆவணங்கள் குற்றப்பத்திர வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளன. | | |
| 19 | குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கு நிபுணர்களின் கருத்துக்கள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அவற்றைப் பெற்றுக்கொண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | | |
| 20 | குற்றப்பத்திர வரைவானது சரியாகவும் முறையாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. | | |
| 21 | குற்றப்பத்திர வரைவின் மென் பிரதி (soft copy) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | | |
| 22 | ஆரம்ப புலனாய்வு அறிக்கையுடன் குற்றப்பத்திர வரைவுகளை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கையில் ஏற்புடைய அலுவலர்/அலுவலர்கள் | | |

| | | | |
|---|---|---|---|
| | தொடர்பில் மேல் ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுப்பதற்கமைவாக ஆரம்ப புலனாய்வின் அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள் குறித்து தலைவர், அமைச்சு செயலாளர் மற்றும் நிருவாக அதிகாரியால் அவதானிப்புகளும் விதப்புரைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | | |
| 23 | சந்தேகத்திற்கு ஆளான அலுவலர் அல்லது அலுவலர்களின் தற்போதைய சேவை/தரம்/பதவி மற்றும் சேவை நிலையம் மாற்றமடைந்திருப்பின் அது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது. | | |
| 24 | குறிப்பிட்ட ஒரு ஆரம்ப புலனாய்வின் போது துர்நடத்தையில் ஈடுபட்ட சில உத்தியோகத்தர்கள் தொடர்பில் தகவல்கள் வெளிப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் அவர்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து அறிக்கையிடப்பட்டுள்ளது. (தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 11:3 ஆம் பிரிவிற்கமைவாக) | | |

**குறிப்பு**

ஆரம்ப புலனாய்வுக்கு ஏற்ப கையெழுத்தில் வாக்குமூலங்களைப் பதிவு செய்கையில் அவ் வாக்குமூலங்களைத் தெளிவாகப் பதிவு செய்வதற்கும் இயன்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் தட்டெழுத்து செய்து சமர்ப்பிப்பதற்குமுரிய நடவடிக்கைகளை எடுக்கவும்.